**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 03–ம் நாள் வியாழன்கிழமை**

**IA No.6/2021**
**in**
**IA No.1/2020**
**in**
**OS no.84/2019**

**---**

1.பொன்னுச்சாமி ......மனுதாரர்/1–ம் வாதி
2. செல்லம்மாள் (இறப்பு) .....2ம் வாதி

**/எதிர்/**

1. ஆண்டி அம்பலம் (இறப்பு)
2. இந்திரா
3. ஜெ.டி.எம்.ஜெயஹக்கர்

. .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(Amended as per order in I.A.No.7/2024 dated:29.04.2024)

இம்மனு என் முன்பாக 30.04.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது .மனுதாரர்/1–ம் வாதிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருS.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும் 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், 3–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா வழக்கில் கடந்த 27.03.2020–ம் தேதியில் எதிர்மனுதாரருக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தாததால் Dismissed for Default என்ற நிலையில் தள்ளுபடியான தாவா மனுவை restore செய்து கொண்டு, தாவா வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/1–ம் வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

இம்மனுவில் தனக்கும், 2–ம் வாதி செல்லம்மாளுக்கும் பாத்தியப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்து தாங்கள் அனுபவம் செய்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் யாதொரு தடையும் இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து கடந்த 02.11.2019–ம் தேதி விசாரணை பட்டியலில் போடப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் ஆஜராகாத காரணத்தினால் வழக்கு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து தாவா வழக்கை மேல்நடத்த வேண்டி நீதிமன்றத்தில் தாங்கள் மனுதாக்கல்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.07.04 15:32:30 +0530

செய்து I.A.No.1/2020 என்ற எண்ணில் நம்பராகி இறுதியாக நாங்கள் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.250/–ம், 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/–ம் 23.07.2020–ம் தேதிக்குள் செலுத்திவைக்கும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்று நீதிமன்றத்தில் கடந்த 09.06.2020–ம் தேதியன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், கோவிட்–19 காரணமாக 2–ம் வாதியும் நோய்வாய்ப்பட்டு கடந்த 17.12.2020–ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், நீதிமன்றத்தில் குறிப்பிட்ட தேதிக்குள் எதிர்மனுதாரர்களுக்கு cost செலுத்தப்படாத காரணத்தினால் தங்களது restore மனுவும் dismiss for default என்ற அடிப்படையில் கடந்த 23.07.2020–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும், தொகையை எதிர்மனுதாரர்களுக்கு செலுத்த தான் தயாராக உள்ளேன் என்றும், எனவே கடந்த 27.03.2020–ம் தேதியில் எதிர்மனுதாரருக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தாததால் Dismissed for Default என்ற நிலையில் தள்ளுபடியான தாவா மனுவை restore செய்து கொண்டு, தாவா வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் setaside மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக தாவா மனுவும் சட்டப்படி அனுமதிக்கக்கூடியதில்லை என்றும், அசல் வழக்கு கடந்த 02.11.2019–ம் தேதி விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்டிருந்த நிலையில் வழக்கினை நடத்தாமல் நீதிமன்றத்தில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அந்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய IA no.1/2020 மனு தாக்கல் செய்து, அதில் 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/– cost செலுத்த உத்தரவிட்டபின்பும், உத்தரவை பின்பற்றாமல் இருந்துவிட்டு தாவா மனு தாக்கல் செய்திருப்பது வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கமென்றும், மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், எனவே மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4. இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனுதாரர் இந்த நிர் மனுவை கடந்த 02.11.2019–ம் தேதியன்று அசல் வழக்கு விசாரணை பட்டியலில் போடப்பட்டிருந்த நிலையில் அன்றைய தினம் மனுதாரரர்கள் ஆஜராகாத காரணத்தினால் மேற்படி வழக்கும் சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர்களின் வருகையின்மையின் காரணமாக அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து தாவா வழக்கை மேல்நடத்த வேண்டி சமூக கோர்டில் மனுதாரர்களால் மனு தாக்கல் செய்து அதுவும் IA 1/2020 என நம்பராகி இறுதியாக மனுதாரர்கள் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.250/–ம் 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/–ம் 23.07.2020–ம் தேதிக்குள் செலுத்திவைக்கும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்று சமூக நீதிமன்றத்தில் கடந்த 09.06.2020–ம் தேதியன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், மனுதாரர் தனது மனு அபிடவிட்டின் 3–வது பாராவில் இந்நிலையில் கடந்த 2020–ம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் கோவிட்–19 காரணமாக அரசாங்க அறிவிப்பின்படி பாதுகாப்பு கருதி யாரும்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.07.04 15:32:37 +0530

வீட்டை விட்டு வெளியேற கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் நானும் எனது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விபரங்கள் பற்றி கேட்டு தெரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது என்றும், மேலும் கோவிட்–19 காரணமாக 2–ம் வாதியும் நோய்வாய்பட்டு கடந்த 17.12.2020–ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், பின்னர் எனது வழக்கறிஞரை சந்தித்து வழக்கின் விபரம் பற்றி கேட்டபோது தான் நீதிமன்றம் குறிப்பிட்ட தேதிக்குள் cost செலுத்தப்படாத காரணத்தினால் மேற்படி எங்களது restore மனுவும் கடந்த 23.07.2020–ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக நான் தெரிந்துகொண்டேன் என்றும், தற்போது நான் மேற்படி தொகையை மேற்படி எதிர்மனுதாரருக்கு செலுத்திவைக்க தயாராக உள்ளேன் என்றும், மேற்படி தவறுகையும் என்னால் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், மேற்படி வழக்கை restore செய்தால் மட்டுமே இறந்துபோன 2–ம் வாதியின் வாரிசுகளை நான் தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க இயலும். ஆகவே தள்ளுபடி செய்த மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுத்து வழக்கை மேல்நடத்த வேண்டி இந்த நிர் மனு மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மாறாக, 3–ம்/எதிர்மனுதாரர் 3–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கவுண்டர் அபிடவிட்டை பரிசீலனை செய்கையில், கவுண்டர் அபிடவிட்டின் 2–வது பாராவில் ஏற்கனவே மாண்புமிகு நீதிமன்றம் கடந்த 02.11.2019–ம் தேதியன்று அசல் வழக்கை விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் அசல் வழக்கினை வாதிகள் நடத்தாமல் வேண்டுமென்றே தள்ளுபடி செய்ய விட்டுவிட்டு அதன்பின்பு அந்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய IA 1/2020 மனு தாக்கல் செய்து அதில் 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/–cost செலுத்த உத்தரவிட்ட பின்பும் அந்த உத்தரவையும் மனுதாரர்கள் பின்பற்றாமல் இருந்துவிட்டு தற்போது தாவா மனு தாக்கல் செய்திருப்பது வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கமாகும் என்றும், கோவிட்–19 முடிந்து இயல்பாக நீதிமன்றங்கள் இயங்கி கொண்டிருந்தபோது கோவிட்–19ஐ காரணம் கூறி cost செலுத்தவில்லை என்ற காரணம் ஒருபோதும் ஏற்புடையதல்ல என்றும், மேற்படி IA 1/2020ஐ restore செய்வதற்கு மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை ஆகும் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமாய் கண்டு கவுண்டர் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனு அபிடவிட் மற்றும் கவுண்டர் அபிடவிட்டை பரிசீலனை செய்த வகையில் தள்ளுபடியான அசல் வழக்கை restore செய்வதில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் உரிய காலத்திற்குள் 1 மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.250/–ம் 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/–ம் செலுத்தாத காரணத்தினால் கடந்த 23.07.2020–ம் தேதியன்று மேற்படி IA 1/2020 மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்பதை அறிய முடிகிறது. 23.07.2020–ம் தேதியன்று நீதிமன்றங்கள் இயல்பாக இயங்கி கொண்டிருந்தாலும் மேற்படி கோவிட்–19 தாக்கம் இருந்து வந்தது என்ற அடிப்படையில் மேற்படி தள்ளுபடியான IA 1/2020 மனுவை restore செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமமாக இருப்பதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, மனுதாரரின் இந்த நிர் மனுவை 3–ம் எதிர்மனுதாரருக்கு ரூ.500/– இந்த நிர் மனுவில் எதிர்வரும் **10.07.2025**–ம் தேதிக்குள் செலுத்திவைக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த நிர் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

VENKADESHPRASANTH

Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.07.04
15:32:44 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் வருடம் ஜீலை மாதம் 04-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.07.04 15:32:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.07.04 15:32:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்